★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி. மு. கழக நாளிதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: ஆடி 22உ திங்கள் (6—8—56) ★ ★ வெளியீடு : ஆடி 23உ செவ்வாய் (7—8—56) [இதழ் 48

ரஷ்ய விமானத்தின் அரிய சாதனை

★

ரஷ்ய ஜெட் போக்குவரத்து விமானம் ஒன்று மாஸ்கோவிலிருந்து 'இர்கட்ஸ்க்' எனும் இடத்திற்கு சுமார் 6,250 மைல்களை 8½ மணி நேரத்தில் கடந்திருக்கிறதாம்!

சுமார் 35 000 அடி உயரத்தில் பறந்து சென்ற இந்த விமானம், அன்றே மாஸ்கோ திரும்பியதாம்!

மாஸ்கோவிலிருந்து 'இர்கட்ஸ்க்' செல்வதற்கு இரயில் மூலம் ஆறு நாட்கள் பிரயாணம் செய்ய வேண்டியிருக்குமாம்!

'வியர்வைத் துளிகளைத் தாருங்கள்'

'இலட்சங்கள் அல்ல— இலட்சியமே பலம்'

தேர்தல் நிதி அளிப்பு விழாவில் அண்ணா விளக்கம்

"திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தலில் கலந்து கொள்வதை மாணவர்கள் ஆதரிக்கிறார்கள் என்பதை வெளிப்படுத்துவதின் அறிகுறியாக, இன்று ஆயிரம் ரூபாய் தேர்தல் நிதி வழங்கியிருக்கிறார்கள். இந்தத் தொகையை வழங்கும்போது 'ஆயிரம் ரூபாயை ஒரு கோடி ரூபாயாக ஏற்றுக்கொள்ள வேண்டும்,' என்று நிதி வழங்கிய தோழர் குறிப்பிட்டார்.

"வழங்கப்பட்ட நிதி, சிறு தொகையா அல்லது பெருந்தொகையா என்பது முக்கியமானதல்ல; ஆனால், வழங்கப்பட்ட நிதியில் அடங்கிக் கிடக்கும் ஒத்துழைப்பு, நல்லெண்ணம், நிதி சேகரிப்பதற்காகக் காட்டப்பட்ட ஆர்வம்—இவை, ஒரு கோடி ரூபாயாலும் சுலபத்தில் பெற்றுவிட முடியாதவையாகும்.

"மாணவர்களின் இந்த ஆர்வத்திற்கு நான் தேர்தல் குழு சார்பில் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

"இங்கே பேசிய தோழர்களில் ஒருவர் தோழர் மதியழகனின் இளவல்; இன்னொருவர் தோழர் அன்பழகனின் இளவல்.

"நமது கழகத்தில் புதியதோர் பரம்பரை உருவாகி வருவதைத்தானே இந்த இளவல்கள் கூறுகின்றனர்?

"ஒரு குடும்பத்தில் தகப்பன் ஒரு கட்சி—மூத்த பிள்ளை வேறு ஒரு கட்சி—இளைய பிள்ளை வேறு ஒரு கட்சி என்ற நிலை நம் நாட்டில் இருக்கத்தான் செய்கிறது; ஆனால், தகப்பனும் பிள்ளைகளும் அண்ணனும் தம்பியும் ஒரே கட்சியில் பணி புரிகிறார்கள் என்பது சாதாரணமானதல்ல; இந்த வகையில், வேறெந்தக் கட்சிக்கும் இல்லாத பெருமை—வாய்ப்பு நம் கட்சிக்குத்தான் இருக்கிறது, இன்று!

"ஆயிரக்கணக்கான குடும்பங்கள், தம் வாழ்நாளை நமது கழகத்திற்காக அர்ப்பணித்திருக்கின்றன.

"நாம் தேர்தலில் ஈடுபடுகிறோம் என்பது குறித்து பலர் பலவிதமாக இன்று பேசுவதைக் கேட்கிறோம்.

"ஆனால், தேர்தல் முடிவில், 'இவர்களா நம்மை எதிர்த்து நின்றார்கள்? எங்கே சென்றார்கள் இப்போது?'—என்று காங்கிரசார் நம்மைப் பார்த்து ஏளனம் செய்கிற நிலை மட்டும் கழகத்திற்கு நிச்சயம் ஏற்படாது பார்த்துக் கொள்வோம்.

"நம்மிடம் பண பலம் இல்லை என்று சிலர் கூறுவது குறித்து இங்கே பேசிய தோழர்கள் குறிப்பிட்டார்கள்.

"தேர்தலில் வெற்றி பெறுவதற்குப் பணம்தான் முக்கியம் என்ற நிலை ஏற்படக்கூடாது; 'அந்த நிலை மாற்றப்படவேண்டும்' என்ற அடிப்படையான நோக்கம் கொண்டவர்கள் நாம்!

"பணபலம் இல்லை என்கிறார்கள்—உண்மைதான்; அந்தப் பலம் இல்லை என்பதுதான் நமது வலிவு!

"இந்த வலிவுக்குக் காரணம், முன் கூட்டியே நமக்கு அதிகமான தன்னம்பிக்கை இல்லை; இந்த அதிகமான தன்னம்பிக்கை இல்லாததால், நாம் தப்புக் கணக்கு எதும் போடவில்லை!

"முழுக்க முழுக்க பாட்டாளிகள் கட்சி—என்று பெருமையோடு எடுத்துக் கூறப்படும் கம்யூனிஸ்டு கட்சியினர் கூட, தேர்தலுக்கு ரூ. 10 இலட்சம் நிதி திரட்ட வேவண்டும் எனத் தெரிவித்திருக்கிறார்கள்; ஆனால் நாம், பல 'இலட்சங்களை' அல்ல—'இலட்சியங்களை' மட்டுமே குறிப்பிடுகிறோம்.

"காங்கிரஸ் கட்சியினர், ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஜீப் கார் வாங்கியிருக்கிறார்கள்; எங்கெங்கே, எந்தெந்தத் தலைவர்களைக்கொண்டு சுற்றுப்பயணம் நடத்தலாம் என்று திட்டமிட்டிருக்கிறார்கள்—என்றெல்லாம் எடுத்துக்கூறி நமது தோழர்களில் சிலர், 'நாம் இன்னும் எதும் செய்யாமலிருக்கிறோமே!' என்று கேட்கிறார்கள்.

"காங்கிரஸ் கட்சியின் நடவடிக்கைகளை மேலெழுந்தவாரியாகப் பார்த்தால், அவர்கள் தேர்தலுக்காகப் பலத்த முஸ்தீபுகள் செய்வதுபோலத்தான் தெரியும்; ஆனால், அடிப்படையாக உள் நோக்கிப் பார்த்தால், நிலைமை வேறாக இருப்பதைக் காணலாம்.

"காங்கிரஸ் கட்சியினர், மாவட்டத்திற்கு ஒன்றுவீதம் ஜீப்கார்கள் வாங்கிக் கிராமந்தோறும் சென்று, தலைவர்களை அழைத்துவந்து பேசச்செய்யத் திட்டமிடுகிறார்கள் என்றால் என்ன பொருள்?

"இவர்களுடைய கடந்த எட்டாண்டுக்கால ஆட்சியில் இப்போதுதான் கிராமங்களுக்குச் செல்லவேண்டும் என்ற எண்ணம் இவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது; இதுகாறும் கிராமங்களை மறந்திருக்கிறார்கள். மேலும், இவர்களுடைய ஆட்சியில் கிராமங்களுக்குச் செல்லவேண்டுமானால், ஜீப்மோட்டாரில் தான் செல்லவேண்டும்; ஏனெனில், கிராமங்களில் நல்ல பாதைகளை இவர்கள் கடந்த காலத்தில் அமைத்துத்தரவில்லை என்பதை எல்லாம், காங்கிரசின் இந்த நடவடிக்கைகள் காட்டவில்லையா?

"எனவே, ஜீப்கார் வாங்கி, மாவட்டந்தோறும் கமிட்டிகள் அமைத்து காங்கிரசார் வேலை செய்ய முற்பட்டிருப்பது, அவர்களது பலத்தை அல்ல—பலவீனத்தைத்தான் காட்டுகிறது.

காங்கிரசு தலைவர் ஒருவர் ஜீப் ஒன்றில் ஏறி, கரடுமுரடான பாதை வழியாகச் சென்று, ஆறு ஒன்றைக் கடந்து, ஒரு கிராமத்தை அடைந்து அங்குள்ள மக்களைச் சந்தித்தால், அந்த மக்கள் என்ன கேட்பார்கள், காங்கிரஸ் தலைவரிடம்? 'ஆற்றை எப்படிக் கடந்தீர்கள்?' என்று கேட்டால், 'ஜீப்கார் மூலம் கடந்தேன்' என்று தலைவர் கூறுவார்; 'அப்படியா? ஆற்றில் தண்ணீர் வந்துவிட்டால், தீவில் அகப்பட்டவர்களைப்போல நாங்கள், கிராமத்தைவிட்டு அடுத்த நகரம் செல்ல முடிவதில்லை; தொல்லைப்படுகிறோம்; நீங்கள், ஜீப்காரில் ஆற்றைக் கடந்ததாகக் கூறுகிறீர்களே! சரி; என்ன வேண்டும் உங்களுக்கு?' என்று கேட்பர் கிராம மக்கள்; 'எங்களுக்கு ஓட்டு வேண்டும்' என்று கேட்பார், காங்கிரஸ் தலைவர்!

"'ஓகோ, அப்படியா? நாங்கள் ஆற்றைக் கடக்க வழியின்றித் தவிக்கும்போது, நீங்கள் ஜீப் காரில் கடந்து வருகிறேன் என்றீர்களே! அதற்காகவா ஓட்டு கேட்கிறீர்கள்?' என்றுதான் மக்கள் கேட்பரே தவிர, 'ஓட்டு வேண்டுமா? தருகிறோம்' என்று கூறிடமாட்டார்கள், மக்கள்! நம்மிடம் பணபலம் இல்லை என்று கூறிடுவோர்—குறிப்பாகக் காங்கிரசார், இதை மறந்துவிடக்கூடாது!

"காங்கிரஸ் இன்று, எந்தெந்த ஊரில், யார் யாரை நிறுத்தினால் வெற்றி பெறமுடியும் என்று எண்ணி ஆள் தேடிக் கொண்டிருக்கிறது.

"நாம் தேர்தலில் ஈடுபடுவது அப்படி அல்ல; குறிப்பிட்ட ஒரு தொகுதியில் நாம் தேர்ந்தெடுக்கும் பிரதிநிதிகள், அந்தந்தத் தொகுதியில் கழகத்தின் தூதுவர்களாக—கழக இலட்சியத்தையும், கொள்கைகளையும் பரப்புபவர்களாக—கழகத்திற்குத் தங்களை ஒப்படைப்பவர்களாக இருக்கவேண்டும் என்று நாம் விரும்புகிறோம்.

"எனவே, காங்கிரசின் நடவடிக்கைகளைக் கூர்ந்து நோக்கினால், அவர்களது பலவீனம் நமக்கு நன்றாகத் தெரியும்.

"அப்படியானால், கழகம் தேர்தலில் ஈடுபடுவதற்குப் பணமே தேவையில்லையா என்றால், தேவைதான்— பணம் தேவைதான்; ஆனால், பல இலட்சமல்ல!

"பணம் வேண்டாம்—தேவையே இல்லை—என்று நாம் கூறவில்லை; பணக்காரர்கள்தான் வேண்டாம் என்று நாம் கூறுகிறோம்.

பணக்காரர்கள், எப்போதுமே தங்களிடமுள்ள பணம் செலவாகாமல் பாதுகாத்துக்கொண்டு, மேலும் மேலும் பணம் சேகரிப்பதிலேயேதான் கருத்தாயிருப்பர்; அப்போதுதான் அவர்கள் நல்ல பணக்காரர் ஆவர்.

"நான், கழகத்திற்குப் பணக்காரர்கள் பணம் தருவதை 'குஷ்டரோகி தரும் வெண்ணெய்க்குச் சமானம்' என்று அடிக்கடி கூறிவந்திருக்கிறேன்.

"நான், வெண்ணெய் வேண்டாம் என்று கூறவில்லை; அதனை, 'குஷ்டரோகி தரவேண்டாம்' என்றுதான் கூறுகிறேன்.

"எனவே, எனக்குக் குஷ்டரோகமும் இல்லை; வெண்ணெயும் தரமாட்டேன்' என்று கூறவும் கூடாது; வெண்ணெய் வேண்டும்—தாருங்கள்; வெண்ணெய் தர இயலாவிட்டால் எண்ணெய் தாருங்கள்; அதுவும் இல்லாவிட்டால் கை வியர்வைத் துளிகளைத் தாருங்கள்,"

—என்று அண்ணா அவர்கள், 5-8-56 அன்று காலை கோகலே மண்டபத்தில் நடைபெற்ற மாணவர் நிதியளிப்பு விழாக் கூட்டம் ஒன்றில் பேசும்போது குறிப்பிட்டார்கள்; பேச்சு முடியவில்லை; தொடர்ந்து வெளிவரும்.

நிகழ்ச்சி

சென்னை, ஆக. 6—

'ஒரு நாட்டின் விடுதலைக்காக நிர்மாணிக்கப்படும் போர்ப் பட்டாளத்தின் முன் வரிசையில் நின்று போடும் பெருமையைப் பெறுபவர்கள் மாணவர்கள் என்ற நிலை ஏற்பட்டுவிட்டால், அந்தப் பட்டாளத்தின் விடுதலை முழக்கம் வெற்றி வாகை சூடும் என்று, கூடியிருந்தோருக்கு நம்பிக்கையூட்டும் விழா நேற்று காலை கோகலே மண்டபத்தில் நிகழ்ந்தது.

தி.மு.க. மாணவர் கிளையினர், வரப்போகும் பொதுத் தேர்தலில் தி.மு. கழகம் ஈடுபடும் என்ற முடிவை ஒட்டித், தேர்தலுக்கு நிதியளிப்பதற்காக சிறப்பானதோர் கூட்டம் ஒன்று கூட்டினர்.

அன்பளிப்பு வழங்கி எண்ணற்ற மக்கள் — ஏராளமான தாய்மார் உட்பட கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

பச்சையப்பன் கல்லூரி மாணவர் தோழர் கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் கூட்டத்தின் நோக்கத்தை விளக்கிவிட்டு, தோழர் தில்லை - வில்லாளன் அவர்களை கூட்டத்திற்குத் தலைமை தாங்கி சிறப்புற நடத்தித் தருமாறு கேட்டுக்கொண்டு முன்மொழிந்தார்.

தோழர் பி. எஸ். மணியன் அதனை வழிமொழிந்தார்.

தலைமைப் பொறுப்பேற்ற தோழர் தில்லை-வில்லாளன் இன்றைய அரசியல் நிலைகளையும், கழகம் தேர்தலில் ஈடுபடுவது என்று செய்துள்ள முடிவையும் சிறிது விளக்கி, மாணவர்கள் முதன் முதலாகத் தேர்தல் நிதியளிப்பது மாணவர்களுக்குப் பெருமை தருவது என்று கூறினார்.

'பணம் இல்லை' இவர்களிடம்—பலம் இல்லை இவர்களிடம்' என்று காங்கிரசார் பேசுகிறார்களல்லவா? அதற்குப் பதிலளிக்கும் வகையில் தோழர் வில்லாளன குறிப்பிட்டார்:—

"தோழர் அழகிரி உயிரோடிருந்த நாட்களில் கூறுவார்—'ஈட்டி எட்டியமட்டும் பாயும்; பணம் பாதாளம் வரை பாயும்,'—என்று பழமொழி கூறுவார்; ஆனால், எங்கள் சுயமரியாதைச் சூறாவளிப் பிரச்சாரம், அண்டபிண்ட சராசரம் அத்தனையிலும் பாயும்; தோழர் அழகிரியின் அந்தப் பதிலையே, இன்று நம்மை எதுமில்லாதவர்கள் என்று பேசுகிற காங்கிரசாருக்கு நான் கூறுகிறேன்."

தலைவரின் முன்னுரையை அடுத்துத், தோழர்கள் சிட்டிபாபு (தியாகராயர் கல்லூரி), இராசமாணிக்கம் (சட்டக் கல்லூரி), கிருஷ்ணமூர்த்தி(சட்டக்கல்லூரி), உ. பில்லப்பன் (பச்சையப்பன் கல்லூரி) க. அறிவழகன் ஆகியோர் திராவிட மாணவர்கள் நமது கழகத்திடம் கொண்டுள்ள பற்றுதலை—ஆர்வத்தைத் தெளிவாக்கிப் பேசினார்கள்.

பின்னர் தோழர் டி. கே. பொன்னுவேலு அவர்கள், மாணவர்கள் சார்பாக, தேர்தல் குழுத் தலைவர் அண்ணா அவர்களிடம் ஆயிரம் ரூபாய் கொண்ட பண முடிப்பைக் கொடுத்து 'இந்த ஓராயிரத்தை ஒரு கோடியாக ஏற்றுக்கொள்ளவேண்டும்; ஏனெனில், இந்த ஆயிரம் ரூபாய்க்குப் பின்னால் தேங்கி நிற்கும் மாணவர்களின் சக்தி அத்தனை மதிப்புடையது, என்று கூறினார்.

தரப்பட்ட நிதியைப் பெற்றுக் கொண்ட அண்ணா அவர்கள், கழகம் தேர்தலில் ஈடுபடுவது குறித்தும், அந்த முடிவை ஒட்டித் தலைமைக் கழகம் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளைக் குறித்தும் விளக்கமானதோர் கருத்துரை நிகழ்த்தினார்.

தேர்தலுக்காக நிதியளிப்பதில் முனைந்திக்கொண்டுவிட்ட மாணவர்களைப் பாராட்டியதுடன், கழகத்தின் சார்பில் அண்ணா அவர்கள் நன்றியும் கூறிக்கொண்டார்.

கூட்டத் துவக்கத்தில் தோழர் நாகூர் அனீபா அவர்கள், பல கழகப் பண்களை, தமக்கே உரித்தான உயர் தனிக் குரலில் இசைத்தார்.

(ந. வி.)

நம் நாடு

சென்னை 6–8–'56 திங்கள்

முடியாத ஒன்றுதான்!

"மத்திய சர்க்கார் ஊழியர்களுக்குத் தரப்படுவதைப் போலவே மாநில சர்க்கார் ஊழியர்களுக்கும் சம்பளம் தருமாறு நாங்கள் கட்டாயப் படுத்துவது முடியாத ஒன்ருகும்" என்று, டில்லி உள்நாட்டு விவகாரத்துறை துணை அமைச்சர் தத்தார், டில்லி மாநிலங்கள் சபையில் தெரிவித்திருக்கிருர்.

பொதுவாக எல்லா மாநிலங்களுக்கும்—குறிப்பாகத் தென்ஞட்டு மாநிலங்களுக்கும் டில்லிக்கும் உள்ள உறவினைத் தெளிவாக இல்லாவிடினும் குறிப்பாக உணர்ந்துகொள்ள உதவுவதாகும், மந்திரியின் இந்தப் பதில்!

சென்னை மாநில சர்க்கார் ஊழியர்களின் தூதுக் குழுவிற்குப் பாரதப் பிரதமர் பண்டித நேரு பேட்டி அளிக்காததற்குக் காரணம், 'இது எங்களுக்குச் சம்மந்தப்பட்ட விஷயமல்ல' என்பதுதான் என்றும் அந்த மந்திரி கூறியிருப்பதும், உறவு முறையை மேலும் விளக்கப் பயன்படுவதாகும்.

'மாநில சர்க்கார் தங்கள் ஊழியர்களுக்கு இவ்வளவு சம்பளம் தர வேண்டும் என்று டில்லியால் கட்டாயப்படுத்த முடியாது — கட்டாயப்படுத்துவது கூடாது' என்று கூறுவதில் உள்ள நியாய அநியாயங்களை, சென்னை சர்க்கார் ஊழியர்கள்தான் தெளிவாக எடுத்துச் சொல்ல வேண்டும்.

சமூகத்தில் பொதுவாகவே, சர்க்கார் ஊழியர்கள் என்ருல் ஒருவகை மதிப்பும், இதர சர்க்கார் அல்லாத ஊழியர்கள் என்ருல் வேறுவகை மதிப்பும் தரப்படுவதைக் காண்கிருேம். இதற்கு, சர்க்கார் ஊழியத்தில் ஒட்டிக்கொண்டிருக்கும் சிறு துளி அதிகாரப் பற்று முதல் எத்தனையோ காரணங்கள் உண்டு. இந்தக் கண்ணேட்டமே அடிப்படையானதோர் மாறுதலுக்கு உட்பட வேண்டும் என்பது, முற்போக்கு வாதிகள் பலரது கருத்து. இந்த நிலையில், மாநில சர்க்கார் ஊழியர்களுக்கும் மத்திய சர்க்கார் ஊழியர்களுக்கும் இடையே பெரியதொரு ஏற்றத்தாழ்வு நிலவுவதை எந்தவகையாலும் நியாயமென முற்போக்காளர் ஒப்ப முடியாது.

டில்லி சர்க்கார் ஊழியத்திற்கு ஒருவகை உயர்வை ஊட்டுவதற்கு இந்த ஏற்றத்தாழ்வு பெருமளவு பயன்படுகிறது என்பதும் முற்றிலும் உண்மையாகும். இந்த உயர்வு-தாழ்விற்கும் அப்பால், வாழ்வுப் பிரச்சினை வேறு இருக்கிறது.

எனவே, சென்னை மாநில சர்க்கார் ஊழியர்கள், தங்களுக்கு, டில்லி சர்க்கார் ஊழியர்களுக்குக் கிடைக்கின்ற அளவு சம்பளம், கிராக்கிப்படி, வீட்டு வாடகைப்படி முதலியன கிடைக்க வேண்டுமெனக் கோருவதில் துளியும் அநியாயமில்லை என்று, துணிவுடையோர் அனைவரும் ஒப்பியிருக்கின்றனர்.

இந்த நியாயத்தை ஏற்க, ஏனே, சென்னை சர்க்கார் மறுத்துவருகிறது.

அவர்களுக்கு இந்த நியாயத்தை உணர்த்துவது, தங்கள் கடமை அல்ல என்கிறது டில்லி! என்னே விந்தை!

சென்னைக்கு இந்த நியாயத்தை உணர்த்துவதற்கு டில்லி மறுப்பதின் காரணம்தான் என்னவாயிருக்க முடியும்?

டில்லி சர்க்கார் ஊழியம் என்ருல் பெரிய இடத்துச் சேவகம் என்று பொதுவாக எல்லா மாநிலத்தவரும்—குறிப்பாக தென்ஞட்டு மாநிலத்தவரும் கருதவேண்டும் என்று டில்லி நினைப்பதாக இருக்க வேண்டும்; அல்லது, 'மாநில சர்க்கார் ஊழியர்களுக்கும் மத்திய சர்க்கார் ஊழியர்களைப் போல சம்பளம் கொடு' என்று கூறினல், மாநில சர்க்கார், எங்கே, நிதி உதவி கோருமோ என்று ஐயுறுவதாக இருக்க வேண்டும்.

முதலாவதாகக் கூறப்பட்ட சிறு நினைப்பு உண்மையாயில்லாவிடினும், இரண்டாவதாகக் கூறப்பட்ட ஐயம், டில்லியிடம் இருக்கத்தான் செய்கிறது—அதுவும், சென்னை மாநிலத்தைப் பொறுத்தது என்பது முக்காலும் உண்மைதான்.

மாநிலங்களிடமிருந்து அவற்றின் வருமானத்திற்கு ஏறத்தாழ ஒப்பான அளவு கப்பம் பெற்றுக்கொள்ளும் டில்லி, எப்படி, 'மாநில சர்க்கார் ஊழியர்களுக்கு டில்லி சர்க்கார் ஊழியர்களைப்போல சம்பளம் கொடு' என்று மாநிலங்களைக் கட்டாயப்படுத்த முடியும்? அது முடியாத ஒன்றுதான்! என்ன செய்வது? மாநிலங்களுக்கும் டில்லிக்கும் உள்ள உறவு அப்படிப்பட்டதாயிருக்கிறதே!

பெரும் பெரும் விவகாரங்களை எல்லாம், இப்படித்தான் கொண்டு செலுத்த வேண்டும் என்று மாநிலங்களுக்குக் கட்டளை பிறப்பிக்கிற டில்லி, மாநில சர்க்கார் ஊழியர்களின் சம்பளப் பிரச்சினையில் மாநிலங்களைக் கட்டாயப்படுத்த முடியாதாம்.

இந்த டில்லியின் போக்கையும், சென்னை சர்க்கார் ஊழியர்கள், தங்கள் சம்பளப் பிரச்சினையோடு சேர்த்து நோக்கட்டும்!

புற்று நோய் ஏற்படக்காரணம்?

"மேற்கு நாடுகளைவிட இந்தியாவிலும்—இலங்கையிலும்தான் அதிகமாக வாய்ப்புற்று நோய் காணப்படுகிறது இதற்குக் காரணம் வெற்றிலை போடும் பழக்கம் (முக்கியமாகக் 'காரம்' மிகுந்த புகையிலையுடன் வெற்றிலை போடும் பழக்கம்) தான் காரணம்," என்று, பேராசிரியர் பிராட்லா, பம்பாயில் கூறியுள்ளார்.

"இறைச்சி உணவுகள் சாப்பிடுவதை இந்தியர்கள் நிறுத்திக்கொண்டால், பற்களுக்குத் தீமை ஏற்படுவது குறைந்துவிடும்" என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மதுவிலக்கு இலாகாவின் வியப்பு

கள்ளச் சாராயம் காய்ச்சுவது குறையவே இல்லையாம்!

வழக்குகளின் எண்ணிக்கை அதிகமாகியுள்ளது

சென்னை, ஆக. 4—

இம்மாநிலத்தில் கள்ளச் சாராயம் காய்ச்சுவது குறையவே இல்லையென்று 1954—55-ம் ஆண்டு மதுவிலக்கு இலாகா நிர்வாக அறிக்கை கூறுகிறது.

இவ்வாண்டு வருவாய் ரூ - 27,21,458; செலவு ரூ. 38,07,763

அறிக்கை மேலும் கூறுவதாவது:— கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள் பல புது வழிகளைக் கையாளுகின்றனர் தென்னை, பனை அதிகமாக வளரும் இடங்களில் கள்ளத்தனமாகக் கள் இறக்குவது பெரும் தொல்லை தரும் பிரச்சினையாக இருக்கிறது; இதைச் சமாளிக்கப் பனஞ்சாறு இறக்குவோர், லைசென்சு வழங்கும் அதிகாரிகள் குறிப்பிடும் அளவுக்குச் சற்றும் குறையாமல் வெல்லம் உற்பத்தி செய்தாகவேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளனர்.

கிராமப்புறங்களில் பிரெஞ்சு பாலிஷ், வார்னிஷ் ஆகியவற்றையும் குடித்துவிடுகின்றனர்.

இந்திய யூனியனுடன் புதுச்சேரி இணைந்துவிட்டதால் மதுபான கடத்தல் அதிகமாகி, தென்ஞற்காடு மாவட்டத்தில் மதுவிலக்குக் குற்றங்கள் அதிகமாகிவிட்டன.

இவ்வாண்டு 95,847 வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டன; சென்ற ஆண்டில், வழக்குகளின் எண்ணிக்கை 79,419 ஆக இருந்தது.

மதுவிலக்கைக் கடுமையாக அமுல் செய்ய, சர்க்கார், மதுவிலக்கு சட்டத்தைத் தக்கவாறு திருத்த உத்தேசித்துள்ளனர் இதற்காக மந்திரி சபை உப-குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

எந்த விதத்திலும் பாதிக்காதாம்!

'சுமார் 35,000 விசைத்தறிகளை ஏற்படுத்துவதற்கு இந்திய சர்க்கார் செய்திருக்கும் முடிவு, கைத்தறி நெசவாளர்களுக்குள்ள வாய்ப்புகளை எந்தவிதத்திலும் மோசமாகப் பாதிக்காது," என்று மத்திய—கைத்தொழில் வர்த்தக மந்திரி கூறியுள்ளார்.

"இப்போதைய கூட்டுறவுத் துறையிலிருக்கும் சில கைத்தறிகளை விசைத் தறிகளாக மாற்றுவதன்மூலம் கிடைக்கும் அதிகப்படியான வருமானத்தில் ஒரு பகுதியை, கைத்தறியில் தொடர்ந்து வேலை செய்யும் நெசவாளர்களின் நன்மைக்குச் செலவிடலாம்; இந்நிலை ஏற்பட்டால் கைத்தறி நெசவாளர்களுக்குச் சிறிதளவு சங்கடங்கள்கூட ஏற்படாமல் தவிர்த்துவிடலாம்" என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இராகுட் அணையின் முதல் கட்டம் பூர்த்தி

300 சதுர மைல் பரப்பளவில் நீர் தேக்கப்படுகிறதாம்

சாம்பல்பூர், ஆக. 2—

இராகுட் அணைக்கட்டுத் திட்டத்தின் முதல் கட்டம் இன்று பூர்த்தியாகி விட்டதாம்.

ரூ. 100 கோடி செலவில் மகாநதியில் கட்டப்படும் இந்த பல நோக்கு அணைக்கட்டுத் திட்டத்தின் வேலைகளில் இன்னும் இரு கட்டங்கள் பாக்கி இருக்கின்றனவாம்.

இப்போது சுமார் 300 சதுர மைல் பரப்பில் நீர் தேக்கி வைக்கப்பட்டிருக்கிறது என்றும், கூடியவிரைவில் தேக்கப்பட்ட நீரைக் கொண்டு மின்சார உற்பத்தி துவங்கும் எனவும் தெரிய வருகிறது.

'நிலத்தை சரிசமமாக—நேர்மையாக விநியோகம் செய்யாவிடில்...'

70 சதவிகிதம் பேர் 'சோஷலிச சமுதாய'த்திற்கு வெளியே இருப்பர்

தொழில் நுட்ப உதவிகளைப் பொறுத்துத்தான் உற்பத்தியின் அளவு இருக்குமென்கிருர் உணவுமந்திரி

"உயர்ந்தபட்ச நில உடைமை 30 ஏக்கர்களாக நிர்ணயிக்கப்பட்டால் நிலமில்லாத விவசாயிகளில் 40 சதவிகிதம் பேர்களுக்கு 5 ஏக்கர்வரை நிலம் கிடைக்குமென்று சில மாநிலங்களில் கணக்கிடப்பட்டுள்ளது; நிலத்தை சரிசமமாக — நேர்மையாக புனர்விநியோகம் செய்யாவிடில் மக்கள் தொகையில் 20 சதவிகிதத்தினர் சோஷலிச சமுதாயத்திற்கு வெளியே இருப்பர்." என்று, மத்திய உணவு மந்திரி வானொலியில் பேசுகையில் கூறியுள்ளார்

பெரிய நிலங்களைத் துண்டாடுவதால் உற்பத்திக்குப் பாதகம் ஏற்படும் என்று கூறப்படும் வாதத்தை மந்திரி ஏற்க மறுத்தார்.

"விவசாயத்தில் ஊக்கமளிப்பதையும் தொழில் நுட்ப ஆலோசனையையும் பொறுத்தே உற்பத்தி இருக்கும்; நில அளவைப் பொறுத்து உற்பத்தி இருக்காது," என்றவர் குறிப்பிட்டார்.

இரயில்வே நிர்வாகத்தில் இந்தியை புகுத்த முயற்சி

நடைமுறைக்குக் கொண்டுவர 'மாதிரி திட்டம்'

காரக்பூர், ஆக. 2—

நாடு முழுமையிலுமுள்ள இரயில்வே அதிகாரிகள், ஊழியர்கள் ஆகியோருக்கு இந்தி மொழிப் பயிற்சி தர, கிடைக்கக்கூடிய வசதிகளை மேலும் பெருக்கிக் கொள்ள வேண்டுமென்று இந்தியஇரயில்வே நிர்வாகம் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது. எனவே, இந்தி மொழி தெரியாத ஊழியர்களின் நன்மைக்காக, அவர்களுக்கு இந்தி மொழி பாடபோதனை நடைபெறும் என்றும், இதை நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கென இரயில்வே குழு, 'மாதிரித் திட்டம்' ஒன்றை வெளியிட்டிருக்கிறது என்றும் தெரிய வருகிறது.

நான்காந்தர இரயில்வே சிப்பந்திகள் உட்பட பல திறப்பட்ட வகுப்பு இரயில்வே அதிகாரிகள், ஊழியர்கள் ஆகியோரிடையே இந்தி மொழி அறியாதோரின் எண்ணிக்கை எவ்வளவு என்பதைக் கண்டறியுமாறு இரயில்வேக்கள் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கின்றனவாம்.

கூடுமானவரையில், தலைமை நிலைய, வட்டார, மாவட்ட தலைமை நிலையங்களிலிருந்து கிடைக்கும் தகவல்கள் அனைத்தும் இனிமேல் கூடுமானவரையில் இந்தி மொழியிலேயே இருக்கவேண்டுமெனவும் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

இந்தி எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட பலகைகள், அறிவிப்புகள் போன்றவைகள் இரயில்வே குழுவினரால் விநியோகம் செய்யப்படும் என்றும் தெரியவருகிறது.

ஆரணியாறு திட்டம்

10,000 ஏகர் நிலம் பாசன வசதி பெறும்

செங்கற்பட்டு மாவட்டம் ஆரணியாறு திட்டம் பூர்த்தியடையும் நிலைமையிலிருக்கிறது; 1,04 00 000 ரூபாய் செலவில் இத்திட்டம் மேற்கொள்ளப்பட்டது; 10,000 ஏகர் நிலம் பாசன வசதிபெறும்.

மண் கரையால் அமைந்ததாக அணையின் பிரதான பாகம் இருக்கும்; இதன் நீளம் $2\frac{1}{4}$ மைல்; 100 அடி நீளத்திற்குக் கல் கட்டிடம் அமையும்; நீர்த்தேக்கத்தில் 19 000 இலட்சம் கன அடி தண்ணீர் தேக்கி வைக்கப்படும்.

திட்டத் துவக்கத்தில் 4,000 தொழிலாளர்கள் பணியாற்றினர்; திட்டம் முடிவடையும் தருவாயிலிருப்பதால், தற்போது 2,000 பேர்களே பணியாற்றுகின்றனர்.

அணையின் உயரம் 50 அடி; நகரி—நாகலாபுரம் (சென்னை—ஆந்திரா எல்லை) இடையே இந்த அணை கட்டப்பட்டுள்ளது.

பாட்ஞ மாணவர்மீது துப்பாக்கிப் பிரயோகம்

உயர்தர போலீஸ் அதிகாரிகள்மீது நடவடிக்கை

ராஞ்சி, ஆக. 3—

கடந்த ஆண்டு ஆகஸ்டு திங்களில் பாட்ஞவில் நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகம் குறித்து விசாரணை நடத்திய தாஸ் குழு, இரு உயர்தர போலீஸ் அதிகாரிகள்மீது படுமோசமான குற்றச்சாட்டுக்களைச் சுமத்தியிருக்கிறதாம்.

இதனை ஒட்டி, அந்த அதிகாரிகள்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுப்பது குறித்து சர்க்கார் யோசித்துக் கொண்டிருக்கின்றனராம்.

இந்த அதிகாரிகளை எப்படித் தண்டிக்கலாம் என்பது குறித்து யோசனை வழங்குமாறு சர்க்கார், பொதுப்பணித் தேர்வுக் குழுவினைக் கேட்டிருக்கின்றனர்.

மேலும் இரண்டு 'சிவில்' அதிகாரிகள்மீது நடவடிக்கை எடுப்பது குறித்தும் குழுவிடம் யோசனை கேட்கப்படுமாம்.

இதற்கிடையில், சம்பவத்தையொட்டி மாணவர்கள்மீது தொடுக்கப்பட்டுள்ள வழக்குகளை எல்லாம் திரும்பப் பெறவும் சர்க்கார் உத்தரவிட்டிருப்பதாகத் தெரியவருகிறது. இதன்மூலம், மாணவர்களிடை ஒரு சுமுகமான சூழ்நிலை உருவாக வழி ஏற்படும் என்று சர்க்கார் கருதுகிறதாம்.

நடிப்பு-இசைப் புலவருக்கு வழியனுப்புப் பாராட்டு

மலர் மாலைகளுக்கிடையே நண்பர் இராமசாமி

மீனம்பாக்கம், ஆக. 3—

இரண்டு திங்களுந்தக் குறையாது நாடகக் கலைப் பணியாற்ற, விமானம் மூலம் மலாயா சென்ற நடிப்பு-இசைப் புலவர் அவர்களையும், அவர் தம் குழுவினரையும் வாழ்த்தி வழியனுப்பிப் பாராட்டுவதற்காக நூற்றுக்கணக்கான நண்பர்களும் கலைஞர்களும் கழகத் தோழர்களும் நிலையத்தில் கூடி இருந்தனர்.

நடிப்பு-இசைப் புலவர் இராமசாமி அவர்கள், வழக்கத்திற்கு மாறாக ஆங்கில உடையில் காட்சி அளித்தார். அக்காட்சி 'வேலைக்காரி' பரமானந்தத்தை நினைவுபடுத்துவதாக இருந்தது.

நண்பர் இராமசாமி அவர்களுக்கு, தி. மு. கழக தலைமை நிலையத்தின் சார்பில், பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும், துணைப் பொதுச்செயலாளர் அவர்களும் இரு பெரிய மலர்மாலைகளை அணிவித்து மகிழ்ந்தனர்; 'நம் நாடு' இதழ் சார்பில் பொறுப்பாசிரியர் காஞ்சி-கல்யாணசுந்தரம் அவர்கள் கலைஞருக்கு மாலை அணிவித்தார்.

'முரசொலி' இதழ் சார்பில் தோழர் கருணாநிதி அவர்கள், இயல்பான மலர்ந்த முகத்துடன் இராமசாமிக்கு மாலை அணிவித்து நகைமொழி பகன்றார்.

அணிவித்த மலர் மாலைகள் அனைத்தையும் மிஞ்சக்கூடிய விதத்தில் சிறப்பாகத் தயாரிக்கப்பட்டிருந்த பெரியதோர் அழகிய மலர் மாலையை தோழர் எஸ் எஸ். பி லிங்கம் அவர்கள் புலவருக்கு அணிவித்துப் பூரித்தார்.

நகைச்சுவை அரசர் தம்பதிகளான என். எஸ் கிருஷ்ணன்—டி. ஏ. மதுரம் அவர்கள், நடிப்பு-இசைப் புலவருக்கு மலர் மாலை அணிவித்து உள்ளம் பூரித்தனர்.

நாடகக் கலைஞர் டி. கே. சண்முகம் அவர்களின் குழு சார்பில் டி. கே. எஸ். அவர்கள், இராமசாமிக்கு மலர் மாலை சூட்டினார்.

இராஜா பஸ் உரிமையாளர் தோழர் டபிள்யூ கே. தேவராசன் அவர்களும் இசைப் புலவருக்கு மலர்மாலை அணிவித்தார்.

பல தி. மு. க. கிளைகளின் சார்பிலும் தனிப்பட்டவர்கள் சார்பிலும் நூற்றுக்கணக்கான மாலைகள் இராமசாமி அவர்களுக்கு அணுவிக்கப்பட்டன.

தலைமைக் கழகத்தின் சார்பில், நடிப்புப் புலவருடன் கலைப்பணி புரியச்செல்லும் நடிக—நடிகைகள் அனைவருக்கும் மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டன.

மலாயாவிற்கு அழைத்துச் செல்ல வந்த அன்பர் நாகை-லிங்கம் அவர்களுக்கும் கழகச் சார்பில் மாலை அணிவிக்கப்பட்டது.

மாலை அணிவித்த கிளைக் கழகங்களும், தோழர்களும் வருமாறு:—

டி. கே. பகவதி, காஞ்சி-மணிமொழியார், புத்தனேரி-சுப்பிரமணியம், நடிகர் அப்துல்காதர், திருவாரூர்-இராமசாமி, ஜூபிடர் சோமசுந்தரம், நெடுமாறன் ஆகியவர்களும், சென்னை தி. மு கிளைக் கழகங்களின் சார்பில், வட்டங்கள் வாரியாக (வட்டங்களின் எண் அடைப்புக்குள் தரப்பட்டுள்ளது) —(2) இளஞ்சேரன், (3) ஜெயசீலம், (4) வெங்கடேசன், (5) நலங்கிள்ளி, (8) என். வி சோமசுந்தரம், (11) என். ராமதாஸ், (12) ஞா. இறையொளி, (15) ஆனந்தன், (17) மு. கன்னியப்பன், (18) வி. கெங்காதரன், (32) நீபட்டு, (36) கோ. இளவரசு, (40) அலமேலு-அப்பாதுரை, (42) கழகத் தோழர், (48) பி. அண்ணாமலை, திருவொற்றியூர்—வெங்கட்ராமன், கொடுங்கையூர்—மு. கிருட்டிணமூர்த்தி, ஆலந்தூர்—கோவிந்தராசன், புழல்—நடராசன், மாதவரம்—நெடுமாறன் ஆகியவர்களும், 11-வது வட்டம்—முத்தமிழ் மன்றம், 24-வது வட்டத்தில் தி. மு க. படிப்பகச் சார்பில் மணி, திரு.வி க. மறுமலர்ச்சி மன்றச் சார்பில் க. வரதன், சூளை சௌந்தரபாண்டியன் படிப்பகச் சார்பில் மு மாசிலாமணி, சூளை பேராசிரியர் சுந்தரனார் நாடகக் கழகச் சார்பில் சிவராசன் ஆகியவர்களும் மலர் மாலை அணிவித்தனர்.

சென்னை கழக முக்கியஸ்தரும் முன்னாள் மாவட்டச் செயலாளருமான தோழர் கே. எம். கண்ணபிரான் அவர்களும் மாலை அணிவித்தார்.

வட ஆற்காடு மாவட்டச் சார்பில் முல்லை-சத்தி அவர்கள் புலவருக்கு மாலை அணிவித்தார்.

இவ்வளவு பாராட்டுதலுக்கும் தோழர்களின் அகமகிழ்வுக்கும் இடையில் நடிப்பு-இசைப் புலவர் இராமசாமி அவர்கள் தனது நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, நாகைலிங்கம் அவர்களுடனும் நடிகத் தோழர்களுடனும் விமானத்தின் மூலம் விடைபெற்றுச் சென்றார்.

வடமொழிதான் இந்தியக் கலாச்சாரத்தின் சின்னமாம்

பண்டித நேரு உண்மை கூறுகிறார்

"வடமொழி, இந்திய மக்களின் கலாசாரத்தின் சின்னமாக விளங்குகிறது."

என்று, தலைமை அமைச்சர் நேரு வர்ணித்துள்ளார்.

இந்தியாவின் அரசியல் உருவம் எப்படி இருந்தபோதிலும்கூட, இந்த அடிப்படை மொழி இந்தியாவைத் தனித்து இயங்கும்படி செய்துவிடுகிறது என்றும் அவர் கூறினார்.

புனா, பண்டார்க்கார் கீழ்த்திசை ஆராய்ச்சிக் கழகத்தின் மகாபாரதத்தின் பர்வம், சாபல்ல பர்வம் வெளியீட்டு விழாவில் பேசுகையில் அவர் மேலும் கூறினார்:—

"நமது புராதன மக்களின் அறிவைச் சித்தரிக்கும் நூல் மகாபாரதம்; அரசியல் துறை நிகழ்ச்சிகளைவிட இந்த நூலின் விளக்கத் தொகுப்புக்களை வெளியிடுவது அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

"பழங்கால மன்னர்களும், அவர்களுடைய பரம்பரையினரும் வாழ்க்கையை நடத்துவதற்கு மகாபாரதத்தின் சாந்தி பர்வம் ஒரு அடிப்படையாக விளங்கியது; மன்னர்கள் அழிந்தபோதிலும் மகாபாரத காவியம் என்றென்றும் சிறப்புற்று விளங்கும்.

"உலகில் வேறு எதையும்விட சிந்தனைதான் மிகவும் சக்தி வாய்ந்தது. சில சமயங்களில் செயல் அவசியமாகிறது. ஆனால் அதைவிட அவசியமாகிறது சிந்தனை. சிந்தனையை வளர்த்து அறிவுக்கு ஊக்கமளித்தபோதுதான் மொழி சக்தி வாய்ந்ததாகும். இந்த மொழி, இந்திய மக்களின் பண்பாட்டுச் சின்னமாக விளங்குகிறது.

"அரசியல் ரீதியாக இந்தியா பரந்து, அல்லது பிளவுபட்டுக் கிடக்கலாம்; ஆனால், இந்தியா முழுவதையும் தனித்து இயங்குமாறு செய்வது இந்த அடிப்படை மொழியாகும்."

மும்முனைப் போராட்ட

நினைவு நாள் பொதுக்கூட்டம்

★

உரத்துப்பாளையம் :

20-7-56 மாலை 6 மணிக்கு உரத்துப்பாளையம் பணிமனையிலிருந்து ஊர்வலம் புறப்பட்டு, அண்ணா திடலை அடைந்ததும், தோழர் எஸ் செல்லமுத்து தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது தோழர் சுப்பராயன் கொடியேற்றினார். தோழர் என். குப்பமுத்து, மற்றும் பலரும் பேசினர்.

போடிநாய்க்கனூர் :

28—7—56 இரவு 7 மணிக்கு தி. மு. கழகச் சார்பில், தோழர் கே. பி. சிவம் தலைமையில், தியாகராயர் திடலில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் டி. கே சினிவாசன், கே. எஸ். சந்தானம் ஆகியோர் போராட்ட வரலாறு பற்றியும் பொதுத் தேர்தலில் கழகம் போட்டியிடுவதின் நோக்கம் பற்றியும் சொற்பொழிவாற்றினர். அன்று மாலை 4 மணிக்கு நகரின் முக்கிய வீதிகளில் சைக்கிள் ஊர்வலம் நடைபெற்றது.

கண்ணகி விழா

30—7—56 மாலை 4 மணிக்கு, சென்னை பெத்துநாய்க்கன்பேட்டைத் தாய்மார் கழகச் சார்பில், சென்னை இரத்தின முதலி தெரு எண் 17 இல்லத்தில், பேராசிரியர் மயிலை-சிவ. முத்து தலைமையில், 'கண்ணகி விழா' சொற்பொழிவுகள் நிகழ்ந்தன. தலைவர் தமது உரையில் சிலப்பதிகாரமியற்றிய இளங்கோவடிகள் அருமை பெருமைகளையும், சிலப்பதிகாரத்தால் அறியலாகும் சிறந்த கருத்துக்களையும் விரிவாக எடுத்துரைத்தார். தோழியர்கள் ஜோதீசுவரி, பரமேசுவரி, கலைச்செல்வி, வெற்றிச்செல்வி, தாமரைக்கண்ணி ஆகியோரும் சொற்பொழிவாற்றினர்.

அநுதாபம்

29-7-56-ல் மாயூரம் வட்டம் எருக்கட்டாஞ்சேரி தி. மு. கழகத் தோழர் இரெ. முத்தையன் தந்தையார் இயற்கை எய்தியமைக்கு மாயூரம் வட்ட தி. மு கழகச் சார்பில், அநுதாபம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

மக்களுக்கு இலவச மருத்துவ உதவி அளிக்க இப்போது இயலாதாம்!

உயிர்காக்கும் மருந்துகளில் பற்றுக்குறையை உண்டாக்க சிலர் முயற்சிக்கிறார்களாம்

கொள்ளை இலாபமடிக்கும் நோக்குடன் ஆராய்ச்சிகளை மறைப்போர் இழிதன்மைபற்றி பிரதமர் நேரு

"கிருமி நாசினிகள் போன்ற அவசியமான மருந்துகள், நல்ல தரமுள்ளவைகளாகவும், குறைந்த விலையிலும் மக்களுக்குக் கிடைக்கச் செய்வது அரசாங்கத்தின் கடமை. சில நாடுகளில் மக்களுக்கு மருத்துவ உதவி அளிக்கும் பொறுப்பு முழுவதையும் அரசாங்கமே ஏற்றுக்கொண்டிருக்கிறது. நம் நாட்டில் மக்களுக்கு இலவச மருத்துவ உதவி கிடைக்கச் செய்வது, இப்போது சாத்தியமாகாது; ஆனால், அதே சமயத்தில், மக்களுக்குக் குறைந்த விலையில் அத்தியாவசியமான மருந்துகள் கிடைக்கும்படி செய்ய அரசாங்கத்தினால் முடியும்."

என்று, பிரதமர் நேரு, புனாவிலுள்ள 'பெனிசிலின்' தொழிற்சாலையில் பேசுகையில் குறிப்பிட்டு மேலும் சொன்னார்:—

"கிருமி நாசினி மருந்து உற்பத்தித் தொழில் போன்ற முக்கியமான தொழில்களை அரசாங்கமே ஏற்று நடத்தவேண்டும்; அல்லது, அந்தத் தொழில்கள், அரசாங்கக் கட்டுப்பாட்டின்கீழ் இருக்கவேண்டும்.

"கிருமி நாசினி மருந்துகள்; உயிரைக்காக்கும் மருந்துகள், இவை அத்தியாவசியமானவை. இந்த மருந்துகளை தயாரிப்பதிலும் வினியோகிப்பதிலும் அரசாங்கத்தின் கண்காணிப்பு ஓரளவு இருக்க வேண்டும். கிருமி நாசினி மருந்துகள்போன்ற அத்தியாவசிய மருந்துகளை, தேவைப்படுவோர் எவ்வளவு விலை கொடுத்தும் வாங்கத்தயாராக இருப்பதால், இந்த மருந்துகளின் விலைகளை உயர்த்த அல்லது மருந்துகளின் பற்றுக்குறையை உண்டாக்கச் சிலர் முயற்சித்துக் கொண்டு இருப்பார்கள்.

"மருந்துகள் தயாரிப்புத் தொழில், தனிப்பட்டவர்களின் வசமிருந்தால் இன்னொரு அபாயமும் உண்டு. கொள்ளை இலாபம் அடிக்கக் கருதியும் பிற காரணங்களுக்காகவும், ஆராய்ச்சிகளின் முடிவுகளை வெளியிடாமல் மூடி மறைத்துவைத்துக் கொள்வார்கள்; ஆனால், அரசாங்கக் கட்டுப்பாட்டின்கீழ் இருக்கும் ஆராய்ச்சிக் கூடத்தில் அப்படிச் செய்யமாட்டார்கள். விஞ்ஞானிகள் புதிதாக கண்டுபிடித்த மருந்துகளும், ஆராய்ச்சிகளின் முடிவுகளும் உலகத்தாருக்குக் கிடைக்கச் செய்வோம்; இந்த உயரிய நோக்கத்துடன் மருந்துத் தயாரிப்பு தொழிலில் இறங்கும் அரசாங்கம் நம் நாட்டு நன்மைக்காகவும், மக்களின் நன்மைக்காகவும் அதை என்றும் கடைப்பிடிக்கும்."

தனிப்பட்டவர்கள் முன்வந்தால் ஆதரவு தருவாராம்!

அமைச்சர் பக்தவத்சலத்தின் தாராளமே தாராளம்!

சென்னை, ஆக 2—

"விவசாயத்திற்குப் பம்பு செட்டுகள் தேவையான அளவிற்குக் கிடைக்காதிருப்பதால், வெளி நாடுகளிலிருந்து பம்பு செட்டுகளை இங்கு இறக்குமதி செய்வதற்கு விசேட வசதிகள் செய்து தரப்படும்; இந்த வசதிக் குறைபாட்டைக் களைவதற்கான உண்மையான பரிகாரம், இங்கேயே ஒரு பம்பு செட் தொழிற்சாலை துவக்குவதுதான்; அப்படிப்பட்ட ஒரு தொழிற்சாலையைத் துவக்குவதற்கு தனிப்பட்டோர் யாராவது முன்வந்தால், சர்க்கார் அதற்குத் தேவையான ஆதரவும், எல்லா வகைப்பட்ட வசதிகளையும் செய்துதரும்,"

என்று, சென்னை மாநில விவசாய அமைச்சர் பக்தவத்சலம் அவர்கள், தாம்பரத்தை அடுத்த மதுகூர் எனும் கிராமத்தில் புதிதாகப் பொருத்தப்பட்ட மின்சார விளக்குகளை எரியவிட்டுப் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

கிராமப்புறங்களில் வாழும் விவசாயிகளின் கஷ்டங்களை சர்க்கார் அறிந்தே இருக்கிறது என்றும், விவசாயிகளின் தொல்லைகளுக்கும் துன்பங்களுக்கும் பாதுகாப்புத் தர, சர்க்கார், அவ்வப்போது மேற்கொள்ள வேண்டிய நடைமுறைகள் குறித்து ஆராய்ந்து அறிவிக்க சிறுசிறு வட்டாரக் குழுக்கள் அமைப்பது குறித்துத் தாம் சிபாரிசு செய்வதாகவும் அவர் கூறியிருக்கிறார்.

செய்திச் சுருள்

★

கலைமணி நாடக மன்றம்

சென்னை சிந்தாதிரிப்பேட்டை நண்பர் குழுவினரின் கலைமணி நாடக மன்றத் துவக்க விழா, 1-7-56-ல் தோழர் டி. பி. எம். சாமி தலைமையில் நடைபெற்றது தோழியர் பிரேமா, தோழர் எம். கே சேகர் ஆகியோர் விழாத் துவக்கத்தில் இன்னிசை வழங்கினர். தோழியர்கலைச்செல்வி மன்றத்தை திறந்துவைத்தார். தோழர்கள் கலைமணி, மா. மோகன், முகவை ஆர். எஸ். பாண்டியன் ஆகியோர் பேசினர். விழாவில் கலந்துகொண்ட பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது.

திருச்சி மாவட்ட நூலகக் குழு உறுப்பினர் தேர்தல்

உடையார் பாளையம் தாலுகா பஞ்சாயத்துத் தலைவர்கள் கூட்டம் 26—7—56-ல், செயங்கொண்டம் கண்ணகி தியேட்டரில் திரு சிவஞானசுந்தரம் தலைமையில் நடைபெற்றது. தோழர் கி. சுந்தரமூர்த்தி அவர்கள் மீண்டும் மேற்படி நூலகக் குழு உறுப்பினராகப் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டார். அன்னாரைப் பாராட்டி பிரமுகர்கள் பலர் பேசினர்; பாராட்டுதல்களுக்கு நன்றி தெரிவித்து தோழர் கி. சுந்தரமூர்த்தி பேசுகையில், புதிய சமுதாயம் காண நூலகச் சேவையுடன் பொதுத் தொண்டாற்றத் தயார் என்று குறிப்பிட்டார்.

சென்னை — சேத்துப்பட்டு வ. உ. சி. இளைஞர் கழகம்

29—7—56ல், கழக மனையில் நடைபெற்ற பொது உறுப்பினர் கூட்டத்தில், மேற்படி கழகம் தி மு கழகச் சார்புடையதா—அற்றதா? என்ற பிரச்சினையில் பல உறுப்பினர்கள் ஆதரித்தும் சில உறுப்பினர்கள் எதிர்த்தும் விவாதித்து முடிவில் ஆதரித்து 17-உறுப்பினர்களும் எதிர்த்து 7-உறுப்பினர்களும் வாக்களித்தனர்.

கோவை அழகிரி நினைவுப் படிப்பகம்

29—7—56 காலை 10 மணியளவில், படிப்பகத்தில் தோழர் கு. பா. சு மணி தலைமையில் நடைபெற்ற சொற்பயிற்சிக் கூட்டத்தில் 'அரசியலில் நாம்' என்ற பொருள் குறித்து தோழர்கள் அசலம், கு ப. செ. நாதன், அங்குதாசு, சாகுல் அமீது, சின்னசாமி, எம். ஆர். சாமி, மு சண்முகம், தி. க. சண்முகம், இராமநாதன் ஆகியோர் பேசினர்.

மாயூரத்தில் தொழிலாளர் கூட்டம்

29-7-56-ல் மாயூரம் தென்பகுதி இரயில்வே எம்பிளாயிஸ் யூனியன் சார்பில், தோழர் எம். மகாலிங்கம் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் வேலாயுதம், கண்ணன், பாராங்குசம், டி. வி. ஆனந்தன், குருசாமி ஆகியோர் பேசினர்.

கோவை நகர முனிசிபல் உயர்நிலைப் பள்ளி

24—7—56-ல் மேற்படி பள்ளி மாணவர் தலைவர் தேர்தல் (இவ்வாண்டுதான் துவங்குகிறது) நடைபெற்றது. தோழர் கே. எ. நடராசன் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதுடன், பள்ளிப் பாராளு மன்றக் கட்சித் தலைவராகவும் நியமிக்கப்பட்டார்.

சூயஸ் மீது போர் மேகம் சூழ்கின்றது

பிரிட்டிஷ் யுத்தக் கப்பலில் பாரச்சூட் வீரர்கள் விரைகின்றனர்

'எதுவரினும் எகிப்து கலங்காது' என்கிருர் நாசர்

எகிப்தில், சூயஸ் கால்வாய்க்கு மேலே, யுத்தமழை பொழியும் கருமேகங்கள் சூழ்ந்து வருகின்றன.

கால்வாய், எகிப்திய சர்க்காரால் தேசிய மயமாக்கப்பட்டது கண்டு கடுங்கோபம் கொண்டிருக்கிற மேற்கத்திய வல்லரசுகள், கால்வாயை சர்வதேச நிர்வாகத்தின்கீழ் கொண்டு வரவேண்டும் என்ற கூக்குரலோடு, கால்வாயை எகிப்திடமிருந்து கைப்பற்றுவதற்காகப் போர் முஸ்தீபுகளில் தீவிரமாக இறங்கியிருக்கின்றன.

பிரிட்டன், அமெரிக்கா, பிரான்ஸ் ஆகிய மூன்று ஏகாதிபத்தியங்களும், 'சூயஸ் கால்வாய் தேசியமயமாக்கப்பட்டதை ஒட்டி எழுந்துள்ள நெருக்கடி நிலை குறித்து விவாதிக்க ஒரு மாநாடு கூட்டுகிறோம் என்று சொல்லிக்கொண்டே யுத்த ஏற்பாடுகளைத் துரிதப்படுத்தி வருகின்றன.

பிரிட்டன், இன்று பெரியதொரு விமானம் தாங்கிப் போர்க் கப்பலை, போர்ட்ஸ்மவுத் துறைமுகத்திலிருந்து அனுப்பி வைத்திருக்கின்றது என்றும், அதில் ஏராளமான 'பாரச்சூட்' வீரர்கள் உட்பட எண்ணற்ற போர்வீரர்கள் செல்லுகின்றனர் என்றும் தெரியவருகிறது.

இதற்கிடையில், பிரிட்டனே இதர வல்லரசுகளோ, யுத்தத்தில் இறங்குமானல்—தாக்குதலைத் துவங்குமானல், அவற்றைச் சமாளிக்க, தகுந்த பாதுகாப்பு நடவடிக்கைகளை எகிப்திய சர்க்கார் மேற்கொண்டு வருவதாகத் தெரியவருகிறது.

எகிப்து மக்களுக்கு முன்னெச்சரிக்கை

எகிப்து முழுவதிலும், தாக்குதல் நிகழ்ந்தால், உயிர்காத்துக் கொள்ள தற்காப்பான முன்னெச்சரிக்கை ஏற்பாடுகளைத் தயாராக வைத்திருங்கள்' என்று எகிப்திய மக்களுக்கு சர்க்கார் அறிவித்திருக்கிறது என்றும், இராணுவத்தின் பல பிரிவுகளும், ரிசர்வ் பட்டாளத்தினரும், எந்த நிமிடமும் ஓடிவரத்தயார் செய்யப்பட்டிருப்பதாயும் கூறப்படுகிறது.

யுத்தத்தில் சிரியாவும் இறங்குமா ?

சிரியா நாட்டுத் தலைவர், சூயஸ் சிக்கல் பற்றி அமெரிக்காவில் பேசும்போது மேற்கு வல்லரசுகளின் யுத்த முஸ்தீபுகளை வன்மையாகக் கண்டித்திருப்பதுடன், 'சிரியாவும் யுத்தத்தில் இறங்கும்' என்று தெரிவித்திருக்கிருர்.

இந்தியாவின் கேள்வி—பிரிட்டனுக்கு சங்கடம்?

மாநாட்டில் கலந்து கொள்ளுவது பற்றி இந்தியா, பிரிட்டனை கேள்விமேல் கேள்வி கேட்டிருப்பது, பிரிட்டனுக்கு மிகுந்த சங்கடமாக இருப்பதாகவும் கூறப்படுகிறது.

நாசர், 'எதுவரினும் எகிப்து கலங்கிவிடாது' என்று உறுதி கூறியவண்ணமிருக்கிருராம்.

எகிப்தைச் சுற்றி, முற்றுகையிடும் போர் மேகங்கள், எப்போது யுத்த மழை பொழியப் போகின்றனவோ என்ற அச்சம் உலக மக்களை வாட்டிக் கொண்டிருகிறது.

---

* * * * * * * * * * * * * * * *

தேர்தல் நிதி அனுப்புவோர் கவனிக்க :

தி. மு. கழக தேர்தல் நிதிக்கு பணம் அனுப்பும் தோழர்கள், 'பொதுச்செயலாளர், தி. மு. கழகம், அறிவகம், இராயபுரம், சென்னை-13' என்ற முகவரிக்கே அனுப்ப வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளப்படுகிருர்கள்.

—தி. மு. க. தலைமை நிலையம்

* * * * * * * * * * * * * * * *

பொதுச்செயலாளர்

இரா. நெடுஞ்செழியன்

சுற்றுப்பயணம்

ஆக. 9 : ஆவணத்தான் கோட்டை
10 : அதிராம்பட்டினம்
11 : ஆலங்கோட்டை
12 : குடந்தை

காமன்வெல்த் எதிர்ப்பு தினம்

7—8—56 மாலை 6-மணிக்கு சென்னை - அரண்மனைக்காரன் தெருவிலுள்ள செயின்ட் மேரீஸ் மண்டபத்தில், திரு. எச். டி. இராசா தலைமையில் நடைபெறும்.

திருவாளர்கள் ம. பொ. சி., என். வி. நடராசன், கே. ஏ. மதியழகன், எஸ். பி. ஆதித்தன், ஜி. இராசமன்னார், எம். ஆர். வேங்கட்ராமன், திருமதி எஸ். விசயலட்சுமி, கே. அருணசலம், ஜி. உமாபதி ஆகியோர் பேசுவர்.

திட்டக் குழுவிலிருந்தும் தேஷ்முக் விலகினர்!

திட்டக் குழுவின் உறுப்பினர் பொறுப்பையும் முன்னள் நிதி மந்திரி சி. டி. தேஷ்முக் துறந்தார் எனத் தெரியவருகிறது.

"தமிழ் நாடு வர்த்தகக் கழகம்"

பலகட்ட முறை விற்பனை வரி எதிர்ப்பு 3-வது மாநில மாநாடு

★

26—8—56-ல் சென்னையில் நடைபெறும்.

★ அன்று வணிகப் பெருமக்களின் வருங்கால திட்டங்கள் வகுக்கப்படும்
★ வரும் தேர்தலில் நமது கடமை பற்றி முடிவு செய்யப்படும்

டிக்கட் : பிரதிநிதி ரூ. 5 நன்கொடை ரூ 10, 25 50, 100, 250
கட்டிட நிதி 10—0—0

குறிப்பு :—மாநாட்டுக்கு வருவோர் தங்கள் வருகையை 20-8-56-க்கு முன்பு தெரிவிக்க வேண்டுகிறோம். தீர்மானங்கள் அனுப்புவோர் 20-8-56-க்கு முன்பு அனுப்பவும். வியாபாரிகளுக்கு வாழ்வளிக்கும் மாநாட்டுக்கு டிக்கட்டுடன் வாரீர்!

மாநாடு மலர் :—மலரில் வெளியிட போட்டோக்களும் ரூ. 15-ம் 15-8-56-க்குள் அனுப்பிவைக்க வேண்டுகிறோம். விளம்பர கட்டண விவரங்களுக்கு எழுதவும்

40, ஆண்டர்சன் தெரு, சென்னை-1

K. கிருஷ்ணமூர்த்தி
M. P. S. ரத்தினசாமி நாடார்
பொதுச்செயலாளர்கள்

'பஞ்சசீலம்' பேசுவோரின் 'அகிம்சா' நடவடிக்கை!

கிளர்ந்தெழும் மக்களை வேட்டையாட அடக்குமுறை பிரயோகம் குறித்து ஆராய்ச்சி

'கல்கத்தா முறை'யும் 'பம்பாய் முறை'யும் பரிசீலிக்கப்படுகின்றன

கல்கத்தா, ஆக. 5—

மக்கள் ஆர்த்தெழுந்து கிளர்ச்சிகளில் ஈடுபட்டால், அதற்கு 'பலாத்காரச் சம்பவம்' எனப் பெயர் சூட்டி கொடுமையான அடக்குமுறைகளை வீசுவது, பொதுவாகவே சர்க்கார்களின் 'அமைதி காக்கும்' போக்காக இருக்கிறது.

இந்த நிலையில், இதுபோன்று மக்கள் கிளர்ந்தெழுந்தால் அவர்களை அடக்குவதற்கு, எல்லா மாநில போலீசாரும் மேற்கொள்ள வேண்டிய ஒரேவகையான நடவடிக்கைகளை வகுத்துத் தருவதில் டில்லி சர்க்கார் தீவிரமாக ஈடுபட்டிருக்கின்றனராம்.

இப்போது 'பம்பாய் முறை'—'கல்கத்தா முறை' என்ற இரண்டு வெவ்வேருன முறைகளைக் குறித்து டில்லி ஆலோசித்துக் கொண்டிருக்கிறதாம் !

'கல்கத்தா முறை' என்பது — சர்க்கார், அடக்குமுறைகளை படிப்படியாகப் பல்வேறு கட்டங்களில் உபயோகிப்பது என்றும், 'பம்பாய் முறை' என்பது — துவக்கத்திலேயே கடுமையான அடக்குமுறைகளை (துப்பாக்கிப் பிரயோகம்) ஏவுவது என்றும் கூறப்படுகிறது.

நடந்த சில ஆண்டுகளாக நாட்டின் பல பாகங்களிலும், கூட்டம் நடத்துவது என்று துவங்கி ஊர்வலம், ஆர்ப்பாட்டம், மறியல் என்று முன்னேறி — சர்க்கார் சொத்துக்களையும் போக்குவரத்துச் சாதனங்களையும் தாக்குதல்— என்று வளருகின்றன என்றும், போலீசார் தடியடி, கண்ணீர்ப் புகை, துப்பாக்கி என்று அடக்குமுறைகளை வரிசையாக பிரயோகிப்பதாகவும், ஆராய்ச்சி செய்து கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதாம்.

கிளர்ச்சியிலீடுபடும் மக்களை வேட்டையாட சர்க்கார் எந்த முறை சிறந்தது என்பதைக் காண்பதில் தீவிரமாயிருக்கின்றனராம்.

காவியக் கலை அரங்கம் செயற் குழுக் கூட்டம்—நாடக ஒத்திகை

சென்னை—இராயபுரம் 'மலர்' இதழ் அலுவலகத்தில் 6—8—56 மாலை 6 மணியளவில், 'காவியக் கலை அரங்க' செயற் குழுக் கூட்டமும், இரவு 9 மணியளவில் 'சிறைக் கோட்டம்' நாடக ஒத்திகையும் நடைபெறும்.

உண்மையாகவா ?

பர்மாவுக்கு வடகிழக்கு எல்லையில் சில நூறு மைல்களுக்கு அருகில் பர்மா படைகளும்—கம்யூனிஸ்டுப் படைகளும் ஒருவரையொருவர் எதிர்நோக்கி நிற்பதாகச் செய்தி ஒன்று கூறுகிறது. முதலில் தாக்க வேண்டாமென்று பர்மியப் படைகளுக்கு உத்திரவிடப் பட்டிருப்பதாகவும் அச்செய்தி குறிப்பிடுகிறது.

THE SCHOOL OF ENGLISH LEARNING

ஆங்கிலக் கல்வி நிலையம்,

60, பிராட்வே — மண்ணடி — சென்னை - 1

★

தமிழ் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள்

ஒரே வருடத்தில்

இலக்கண ரீதியாக

இங்கிலீஷ் திருத்தமாக நேரில் கற்கலாம்

சென்ற வருட ஜூலை மாதம் ஆரம்பமாகிய இங்கிலீஷ் வகுப்புகள் இந்த வருட ஜூலையில் முடிவடைந்தன.

புதிய வகுப்புகள்

ஆக. 10-ந் தேதி ஆரம்பமாகின்றன

வகுப்பில் சேர விண்ணப்பம் செய்துகொள்ள கடைசி தேதி: 9—8—1956

முழு விவரங்களை நேரில் வந்து தெரிந்துகொள்க.

இலக்கண ரீதியாக இங்கிலீஷில் பேசவும் சொந்தமாகக் கட்டுரைகள், கதைகள், கடிதங்கள் எழுதவும் அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படும். காலையிலோ மாலையிலோ வசதியான நேரத்தில் வகுப்பிற்கு வந்து ஒருமணி நேரம் படித்தால் போதுமானது.

முக்கிய அறிவிப்பு: 16 வயதிற்கு மேற்பட்டவர்களே இவ்வகுப்புகளில் சேரலாம். பெண்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

ஓரளவு இங்கிலீஷ் தெரிந்தவர்களும் இங்கு நடைபெறும் வகுப்புகளில் சேர்ந்து திருத்தமாகக் கற்றுப் பயனடையலாம்

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, நாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.